செ.வெ.எண் : நாள்: 07.09.16

**பத்திரிக்கை செய்தி**

**புதுவாழ்வு திட்டம் சார்பாக டெங்கு விழிப்புணர்வு பேரணி மற்றும் பயிற்சி முகாம்**

----

விருதுநகர் மாவட்டத்தில் 165 ஊராட்சிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் நேற்று (07.09.2016) மேற்கொள்ளப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு மற்றும் நரிக்குடி ஆகிய நான்கு ஒன்றியங்களுக்குட்பட்ட 165 ஊராட்சிகளிலும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதில் அனைத்து கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் களப்பகுதி அலுவலங்களை சுற்றிலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களைக் கொண்டு சுத்தப்படுத்தும் பணி நடைபெற்றது. அதனை தொடர்ந்து கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களில் வைத்து அனைத்து உறுப்பினர்களுக்கும் டெங்கு விழிப்புணர்வு தொடர்பான குறுப்படம் காண்பிக்கப்பட்டது. மேலும் ஒவ்வொரு ஊராட்சிகளிலும் மேற்குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களைக் கொண்டு டெங்கு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. அன்று மாலை ஒவ்வொரு சுயஉதவிக்குழு உறுப்பினர்களும் தலா 5 வீடுகளுக்கு சென்று டெங்கு தடுப்பு நடவடிக்கைகளாக தண்ணீர் தொட்டியை சுத்தம் செய்ய வைத்தல், நீண்டகாலமாக பயன்படுத்தாமல் உள்ள வீடுகளை திறந்து தண்ணீர் தேங்கி இருந்தால் அதனை கொட்டி விடுதல், பழைய டயர்கள், சிரட்டைகள், உரல்கள் ஆகியவற்றில் தேங்கி இருந்த தண்ணீரை அகற்றுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு, ஒரே நாளில் மட்டும் 165 ஊராட்சிகளில் 1,425 சுயஉதவிக்குழுகளிலிருந்து 21,375 உறுப்பினர்கள் இந்த மாபெரும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்மூலம் 1,06,875 வீடுகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், புதுவாழ்வு திட்ட மாவட்ட திட்ட மேலாளர் சண்முகராஜ், உதவி திட்ட மேலாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார மருத்துவ அலுவலர்கள் மற்றும் அனைத்து புதுவாழ்வு திட்ட களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**